# திராவிடநாடு

1—6—58 | வார வெளியீடு | விலை 16காசு




தோற்றம்:
15—1—1900

மறைவு:
22—5—1958




# காங்கிரஸ் சீர்திருத்தம்

மறைந்த அண்ணன் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் "சண்டே அப்சர்வர்" ஆங்கில ஏட்டின் மூலம், வாரா வாரம் தீட்டிடும் கருத்தோவியங்களைப் படித்து இன்புற்றோர் ஏராளமாகும். மறைந்த அப்பெரியார், கடைசியாகத் தனது ஏட்டில் தீட்டிய கட்டுரை இது:-

வங்காள காங்கிரசிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி அங்குள்ள முதலமைச்சருக்கு, அண்மையில், பண்டித நேரு எழுதிய கடிதம் ஒன்றில், காங்கிரசில் ஏற்பட்டுள்ள தொல்லைகளுக்கான அடிப்படைகளை ஆராய்ந்திருந்தார். மந்திரிகளையும், உறுப்பினர்களையும் பொறுக்குவதில் காங்கிரஸ் தனது தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றும், அறிவாளிகள் வந்து சேரும்படியாகத் தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்றும், அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் காந்தியாருக்குப் பிறகு ஏற்பட்ட சகாப்தத்தில், காங்கிரசுக்கு இந்த வகையில் இறங்கு முகம்தான்! சுமார் 1918-வாக்கில், பிரிட்டிஷாரை எதிர்த்து மக்களைத் திரட்ட வேண்டும் எனும் எண்ணத்தில், நாலணா கொடுக்கும் யாரும் சேர்ந்துகொள்ளலாமென்று, கதவுகள் விரியத் திறந்துவிடப்பட்டன. கதர் — மதுவிலக்கு — மொழிவாரி மாகாணம்—கிராமத்துக்குப் போவோம் என்பன போன்ற, திட்டங்களையும் வகுத்துக்கொண்டது. பிரிட்டிஷாருடன் போராட வேண்டியிருந்ததால், ஒருவர் சொல்லுக்கு ஆடுவதென்பதும் முறையாகக் கருதப்பட்டது. மேலிடத்தின் உத்தரவுக்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டியவர்களாயினர் — இராணுவத்திலுள்ளதுபோல ஒரு கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டது—செய் அல்லது செத்துப்போ, என்பதே விதிமுறையாகக் கருதப்பட்டது. சிறைக்குச் செல்வது, சத்யாக்கிரகம் செய்வது போன்ற தியாகச் சேவைகளுக்கும் மக்கள் தூண்டப்பட்டனர். இதனால் எல்லாம் ஒரு ஆர்வமும், உணர்ச்சியும் உண்டாக்கப்பட்டது! இந்த வேகத்தின் காரணமாக, கொள்கைகளை வரையறுப்பதிலும் நடைமுறையிலும் சிரத்தை காட்டப்படவில்லை. அதிகார வாய்ப்பும் வசதியும் பெறத்தக்க சிலர், அங்கே இடம் பெறலாயினர். ஜெயக்கர் போன்ற புத்திசாலிகள், விரைவில் வெளியேறினர். டேஜ்பகதூர் சாப்ரு போன்றவர்கள், அதில் சேரவில்லை. உறுப்பினர் தொகை அதிகமாக வேண்டும் என்பதிலும், சொன்னதைக் கேட்பவர்கள் இருக்க வேண்மென்பதிலும் அதிகக் கவனம் எடுத்துக்கொள்ளப்பட்ட காரணத்தினால், அறிஞர் பெருமக்கள் பலருக்கு அங்கு இடம் தரப்படவில்லை. பிரிட்டிஷாரை வெளியேற்றும் ஒரு மக்கள் இயக்கம் என்று மட்டுமே கருதப்பட்டது! காங்கிரஸ் இப்போது ஆட்சிக்கு வந்துவிட்டதால், இந்த நோக்கத்துக்கு இப்போது வேலையில்லை. நல்லாட்சிக்குத் தேவையான புத்திக் கூர்மையும், ஆய்ந்தோய்ந்து செய்யும் திறனுமே ஒழிய, முழக்கங்களோ வீரமோ அல்ல; சொன்னதைக் கேட்கும் சுபாவமும் கூடாது — எதையும் யோசித்துச் செய்யும் பக்குவம் வேண்டும். இதனால்தான் சுயராஜ்யம் கிடைத்ததும் காங்கிரசைக் கலைத்துவிடும்படி காந்தியார் சொன்னார்!! ஆனால், காங்கிரஸ் தலைவர்கள் அந்தமதியை ஏற்கமறுத்தனர் — ஏனெனில், தேர்தலில் வெற்றி பெற்று வரக்கட்சியிருக்க வேண்டுமெனக் கருதினர். ஆனால், அப்படிப்பட்ட நல்லதொரு அரசியல் கட்சியாகவோ, ஆளுங்கட்சியாகவோ அது விளங்குகிறதாவெனின், இல்லை.

ஆளும் கட்சியாக விளங்க வேண்டுமென்றால், காங்கிரஸ் தன் கொள்கைகளை இல்லாவிட்டாலும், எண்ணங்களையாவது மாற்றிக் கொள்ள வேண்டும். நடைமுறைக்கு ஒத்த, அறிவுக்கு ஏற்றதான வகையில், அரசியல் ரீதியில் அதன்போக்கு இருக்கவேண்டுமே ஒழிய, கதர் அபிவிருத்தி போன்றவைகளின் அடிப்படையில் கொள்கைகளை வகுப்பதை விட்டுவிட வேண்டும். அதன் உறுப்பினர்கள் கற்றறிந்தவர்களாகவும், இலாப வேட்டையில் ஆசையில்லாதவர்களாகவும் இருக்க வேண்டும். சர்க்காரை நடத்துவதிலும், ஆலோசனைகள் பெறும் போதும், கட்சிக்கு அப்பாற்பட்ட திறமைசாலிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் தைரியம் வர வேண்டும். இருப்பதைவிட அதிகமான சுதந்திரமும் சகிப்புத்தன்மையும், நிலையை அறியும் பண்பும்தான் இன்று காங்கிரசுக்குத் தேவை. நேரு, தலைவராக இருக்க விரும்புவரேயானால், உயர்ந்தஒழுக்கமும் இந்தப் பண்பாடுகளும், காங்கிரசில் உண்டாகும்படி செய்ய வேண்டும். கெட்டுவிட்டது, கெட்டுவிட்டது என்று குற்றஞ்சாட்டிவிட்டு, அதற்கான மாற்றத்தை எதிர்காலம் செய்து கொள்ளட்டும் என்று விட்டுவிடுவதால், காங்கிரசுக்குப் பயனில்லை!!

★

# இலட்சிய வீரரை இழந்தோம்

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [1—6—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 46

எடுத்த காரியத்தை எந்த இடுக்கண் வந்துற்ற போதிலும் முடித்தே தீருவேன் என்ற எஃகுள்ளம் படைத்த எங்கள் பெரிய அண்ணன்—கட்சியின் நலனுக்காகத் தனத்தையும் தன்நலத்தையும் இழந்தும் மறந்தும் மறையாப் புகழ்பெற்ற மாண்பினன்—இலட்சியமே என் உயிர், மற்றவையெல்லாம் எனக் கலட்சியம் என்று எழுத்தாலும் பேச்சாலும் நிலை நாட்டிய நீதிக் கட்சியின் செம்மல்—நேர்மையின் இருப்பிடம் திரு: **பாலசுப்ரமணியம்** அவர்கள் இன்று நம்மிடம் இல்லை—இயற்கை தனதாக்கிக் கொண்டு விட்டது.

இருபதாண்டுகளுக்கு மேலாகவே இயக்கப்பணி புரிந்து திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கு வழி கோலியவர்களில் ஒருவரை—நெஞ்சுரம் படைத்த நல்லவரை நாடு இழந்துவிட்டது — நாம் இழந்து விட்டோம்.

இனி நாம் அவரைக் காணமுடியாது — ஆம் அவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் —நாம் அவரை பிரிந்து நிற்கிறோம் — பிரிவாற்றாமையால் கலங்குகிறோம்—கதறுகிறோம்.

இயற்கை எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்த போதிலும், இடையிடையே அதற்கும் கொடுமையில் பற்றும் பாசமும் ஏற்பட்டு, "நல்லது செய்கிற நான் நல்லவர்களை என்னிடமே வைத்துக்கொள்வேன்" என்ற பொறாமையுணர்ச்சியுடன் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது, இயற்கையே உனக்கு இன்னது செய்யலாம், இன்னது செய்யக் கூடாதென்ற நியதியே இடையாதா என்றுகூடக் கேட்கத் தோன்றுகிறது.

இன்று நமக்கிருக்கும் ஆதரவையும் இருபதாண்டுகளுக்கு முன் நமக்கிருந்த ஆதரவையும் ஒப்புநோக்கிப் பார்ப்பவர்களுக்குத்தான் திரு. பாலசுப்ரமணியம் போன்றோரின் தொண்டின் அளவு எவ்வளவென்பது தெரியும்.

நீதிக்கட்சியின் நிலை பெயராத் தொண்டராக இருந்து, அவர் திராவிட மக்களின் முன்னேற்றத்தில் எந்த அளவு பற்றும் பாசமும் கொண்டு பணியாற்றினர் என்பதை அறிய விரும்புவோர், அவரால் நடத்தப்பட்ட "சண்டே அப்சர்வர்" பத்திரிகையின் பழைய பிரதிகளை ஒருமுறை திருப்பிப் பார்த்தால் நன்கு தெரியும்.

*1938*-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரின் வெற்றிக்கு அவரால் நடத்தப்பட்ட ஆங்கில வார இதழும் (Sunday observer) ஒரு காரணமாக இருந்ததென்றால், அது மிகைபடக் கூறுவதாகாது. இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள் சிறையில் பட்ட கொடுமைகள் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் தீட்டிய தலையங்கத்தால் நீக்கப்பட்டன என்பதை நாம் அறியும்போது, ஆதரவு அதிகம் பெருத நமக்கு அந்தக் காலத்தில் அது எவ்வளவு உதவியாகவும் பெருமையாகவும் இருந்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமோ !

பொதுவாகவே திராவிட இயக்கத்தில் பற்றுக் கொண்டு பணியாற்றிய பாலசுப்ரமணியம் அவர்கள், தமது கடைசிக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நேரடியான தொடர்பு வைத்து, நமது இலட்சியங்கள் நிறைவேற ஆர்வமும் ஆசையும் கொண்டு பணியாற்றி வந்தார்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், பழந்தலைமுறையின் ஒரு பெருமைமிக்க பிரதிநிதியாக விளங்கியவர் ; சமூகத்தில் நிலவுகிற கொடுமைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிராகப் போராடுவதிலேயே வாழ்நாளைச் செலவிட்ட பெருந்தகையாளர்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு நல்ல பேச்சாளர். தமக்குச் சரி என்று படுகிற கருத்தினை வலியுறுத்துவதற்காக, கடுமையான பதப்பிரயோகத்திற்கும்கூடத் துணிந்து விடுகிறவர். தேர்தல் காலங்களில், மக்களிடை பேசும்போதெல்லாம் அவரது குரலில் தொனிக்கும் உறுதி, பலருக்கு ஆச்சரியம் தருவதாயிருக்கும். தமது இளமைப் பிராயந் தொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த அவர், எவருக்கும் அஞ்சாத துணிச்சல் மிக்கவராய், சுயசிந்தனையுடையவராய் விளங்கியவராவார்.

நமது இலட்சியம் நிறைவேறிக் கொள்கை வெற்றி பெறுவதைக் கண்டு களிக்கும் அவாவோடு பணியாற்றியவரை இடையே இயற்கை புகுந்து தனதாக்கிக்கொண்டு விட்டது.

உண்மைக்கும் நேர்மைக்கும் உறைவிடமாக விளங்கிய உத்தமரை நாம் இழந்துவிட்டோம். அவருடைய இழப்பால் வருந்தும் எல்லாருக்கும் நமது ஆறுதல் மொழிகளைக் கூறி, அவர் செய்த

தொண்டை அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து செய்வோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்வோமாக. வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் தொண்டு.

*

நீதிக் கட்சிக் காலந்தொட்டு திராவிடர் இயக்கத்தில் பற்றும், பாசமும் கொண்டு இடைவிடாது பணியாற்றி வந்தவரும், 'சண்டே அப்சர்வர்' ஆங்கில வார இதழின் ஆசிரியருமான பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், தமது 58-வது வயதில், 22—5—58 காலை 8-மணியளவில் இயற்கையெய்தினார்.

கடந்த சில காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்த அவர், மீண்டும் உடல்நலம் பெற்று வருவதாகவே நமக்குத் தகவல் தரப்பட்டுவந்தது, எனினும்' அவர் மாரடைப்பால் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டார் என்ற செய்தி நம்மைத் திடுக்கிடவைத்துவிட்டது.

செய்தியறிந்ததும், நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் மறைந்த அத்தலைவருக்கு இறுதி வணக்கம் செலுத்த, இராயப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்றிருந்தனர்.

கழகத்தின் சார்பில், பொதுச் செயலாளர் அவர்கள், மறைந்த அத்தலைவருக்கு மலர்மாலை அணிவித்து, இறுதி வணக்கம் செலுத்தினர்.

என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து, முல்லை-சக்தி, அலமேலு-அப்பாதுரை முதலியோரும் மலர் மாலைகள் அணிவித்து, தங்களது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி எம். பி., நகரசபைத் துணை ஆணையாளர் என். சங்கரன் முதலியோரும், தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

மறைந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்களது சடலம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, இல்லத்தின் முன்வாயிலில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

மறைவு கேட்ட கழகத் தோழர்கள் பலரும், பொதுமக்களும், மறைந்த வீரரைக் காண ஏராளமாகக் கூடித் தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

1900-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15-ம் நாள் பிறந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது இளமைப் பருவம் தொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டு விளங்கியவர். கடந்த சுமார் இருபத்தைந்து ஆண்டுக் காலமாக, நீதிக்கட்சி திராவிடர் இயக்கம் ஆகியவற்றில் நீங்காப் பற்றுக்கொண்டு அரும்பாடுபட்டவர். அவரது மறைவு நமக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

கடந்த 23 ஆண்டுக் காலமாக 'சண்டே அப்சர்வர்' என்ற ஆங்கில வார இதழைத் தோற்றுவித்து நடத்திவந்த அவர், கடந்த 1957-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தென்சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகப் போட்டியிட்டு, எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரைவிட ஒரு சில வாக்குகள் குறைவாகப் பெற்றதனால் வெற்றி பெறத் தவறிவிட்டார். 1952-ம் ஆண்டிலும், அதே தொகுதியில் கழகத்தின் ஆதரவு பெற்று, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலின்போது நமது கழகத்தின் உறுப்பினராகி, கழக வளர்ச்சியில் மிக்க ஆர்வம் காட்டிவந்தார்.

மறைந்த அவருக்கு தவறிப் போய்விட்ட முதல் மனைவியார் மூலம் ஒரு மகனும், மூன்று பெண்களும் உள்ளனர்; இரண்டாம் மனைவியாருக்கு மூன்று ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண்பிள்ளைகளும் உள்ளனர்.

அவரது மறைவால் துயருறும் அவரது துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

தங்கல்: மன்னார்குடி
22—5—58

"நமது **பி. பாலசுப்பிரமணியம்** அவர்கள் இறந்துவிட்ட செய்தியை இன்று மாலை 5½-மணிக்கு அறிந்து திடுக்கிட்டேன். நமக்கெல்லாம் மூத்த அண்ணனாகத் திகழ்ந்தவர் பிரிந்துவிட்டார்; இந்த ஆற்றொணாத் துயரை எப்படித் தமிழக மக்கள் தாங்கிக் கொள்ளப்போகின்றனரோ?

இன்று சென்னையே துக்கக் கடலில் ஆழ்ந்திருக்குமெனக் கருதுகிறேன்.

நான் நேரில் வந்து இறுதி வணக்கம் செலுத்த இயலாமற்போனபோதிலும் நம் தோழர்கள் அனைவரும் சென்று, அன்னாருக்கு இறுதி வணக்கம் செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி வாருங்கள்.

ஒரு குடும்பத் தோழரை — அண்ணனைப் பிரிந்த இந்தத் துக்கத்தை என்னால் மறக்க முடியவில்லை.

தமிழக மக்கள் அத்தனை பேருக்கும் எந்த வார்த்தையைக்கொண்டு ஆறுதல் கூறுவது என்பதே எனக்குப் புரியவில்லை."

அண்ணாதுரை

# செலவைத் தவிர்த்த தோற்றம்

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் தமிழ்க் குடும்பம் அது. அந்தக் குடும்பத் தலைவனும் தலைவியும் களவு வாழ்வில் திளைத்துப் பின்னர் கற்புவாழ்வை மேற்கொண்டவர்களாவர். குறுகுறு என நடந்தும் மழலை மொழிந்தும் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கும் புதல்வன் ஒருவனும் அவர்களுக்குப் பிறந்திருந்தான். இவ்வாறு காதல் அமுதமும் குழந்தை இன்பமும் குறைவின்றி நிறைந்திருந்ததால் அந்தக் குடும்பத்தில் இன்பமும் அமைதியும் இணைந்து குலுங்கின.

நாட்கள் நகர்ந்தன. அன்பும் அறனும் உடைய பண்புடைய அந்தக் குடும்பத்தில் துன்பப் புயல் வீசத் தொடங்கியது. தலைவன் கவலை கொண்டான். அதைக் கண்ட தலைவிக்கோ கலக்கம் மிகுந்தது. இதற்கெல்லாம் காரணம் பொருளே ஆகும்.

பொருள், வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும். அதனை ஈட்ட வேண்டியது ஆடவரது தலையாய கடமையாகும். பொருளை இருப்புப் பெட்டியுள் இறுக்கி வைப்பதற்காக அறத்திற்கு முரணான வழிகளில் செல்லும் இக்காலத்தவரைப்போல் பண்டைத் தமிழர்கள் வாழ்ந்தார்களில்லை. விருந்தோம்புதற்கும், சுற்றம் தழுவுவதற்கும், இரவலர்களைப் புரப்பதற்கும், முன்னோர்கள் தேடி வைத்த செல்வத்தைச் சிதைத்தல் கூடாது என்ற கருத்தை நிலை நிறுத்துதற்கும் அவர்களுக்குப் பொருள் தேவைப் பட்டது. இத்தகைய அறத்தின் அடிப்படையிலே எழுந்த தேவைக்காகத்தான் பழந்தமிழர்கள் பொருளீட்டச் சென்றனர்.

அறத்தின் அடிப்படையிலே எழுந்த தேவைதான் தலைவனுக்கும் பொருள் தேடும் கவலையைத் தந்தது. அந்தப் பொருளைச் சொந்த ஊரிலேயே ஈட்டுவதற்கு வழியிருந்தால் கவலையில்லை. ஆனால், தலைவன் வாழும் ஊரிலோ அந்த வாய்ப்பு இல்லை. அவன் வெளிநாடு சென்றுதான் பொருளைப் பெருக்கவேண்டியிருந்தது. அதை எண்ணித்தான் தலைவன் கவலை கொண்டான். இன்னுயிர்க் காதலியையும், அருமை மகனையும் பிரிந்து நெடுந் தொலைவு எப்படிச் செல்வது எனக் கலங்கினான். மனைவியையும் மகனையும் எண்ணிக்கொண்டு 'ஈதலும் துய்த்தலும்' இல்லாது வறியனாய் வாணாளை வீணாக்குவதா என்ற கடமையுணர்ச்சியும் அவ்வப்போது அவனிடையே எழுந்தது. இத்தகைய போராட்டங்கள் அவனுள்ளத்தே நடந்து அவனைத் துயருறுத்தி வந்தன. இறுதியில் பொருள் தேட மனைவியையும் மகனையும் பிரிந்து சென்றுவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். ஆனால், "இந்த முடிவைத் தலைவியிடம் புறப்படுவதற்கு முன் கூறுதல் கூடாது. அப்படிக் கூறினால் எனது செலவுக்கு அவள் ஒருபோதும் ஒருப்பட மாட்டாள். எனவே செல்லும் போதுதான் அவளிடம் சொல்ல வேண்டும்" என்றெண்ணிச் செலவுக்கான செயல்களில் ஈடுபடத் தொடங்கினான்.

**து. இரத்தினவேல்**

தலைவன் பொருள் தேட வெளிநாடு செல்ல இருக்கும் சேதி தலைவியின் காதுக்கு எப்படியோ எட்டியது. எட்டியவுடன் அவள் கொண்ட கலக்கமும் உற்ற துயரமும் பெரிது; மிகப் பெரிது. 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்பதையும், வினையின் ஒரு கூறே பொருளீட்டல் என்பதையும், பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று எனபதையும் அவள் நன்குணர்வாள். இருந்தும் அவள், தலைவன் பொருளீட்டச் செல்ல இருக்கும் சேதி அறிந்து ஆறாத் துயருற்றாள். காரணம், பொருளின் பொருட்டுத் தலைவன் தன்னையும் அருமை மகனையும் பிரிந்து செல்கிறானே என்பதுதான். அத்துடன் மட்டுமல்லாது தலைவன் கடந்து செல்ல வேண்டிய காட்டு வழிகளையெல்லாம் அவள் கணநேரம் எண்ணிப் பார்த்தாள். ஐயகோ! அதை எண்ணவே அவள் நெஞ்சு பதறியது. நீரும் நிழலும் அறியாமல் பகலவனுடைய கடுங் கதிர்களால் வெந்து தீய்ந்த காடு, காய்ந்து போன ஓமை மரங்கள், அவற்றிற்கிடையே பாறைகளில் உதிர்ந்த நெல்லிக் காய்கள், விளையாடும் வட்டுக் காய்கள்போல் சேர்ந்து கிடக்கும் அவற்றின் தோற்றம், பதித்து வைத்தாற்போன்ற கூர்மையான கற்கள், தீட்டப்பட்டாற் போன்ற அவற்றின் தேய்ந்த கூரிய முனைகள், அவற்றால் நடப்பவரின் கால் விரல் முனைகள் சிதையும்படியான வழிகள், அவ்வழிகளில் வருபவர்களை அம்பெய்து கொன்று பொருளைக் கவர்கின்ற ஆறலை கள்வர்கள்—இத்துணையும தலைவியின் மனக் கண் முன் தோன்றி அவளை நடுங்கச் செய்தது. தன்னையும் தன் மகனையும் பிரிந்து தன் இன்னுயிர்க் காதலன் இக்கொடிய காட்டு வழிகளில் செல்லத் துணிந்

திருப்பதைத் அவளால் பொறுக்க முடியவில்லை. முன்பு—தலைவனும் அவளும் களவுக் காதலராய் இன்பம் துய்த்து வந்த காலை—தலைவன் அவளுக்களித்த வாக்குறுதியொன்று அதுபோது அவளது நினைவிற்கு வந்தது. "கண்ணே! இனி உன்னை எக்காரணத்தைக் கொண்டும் பிரியேன்; பிரிதல் அறநெறி அன்று என்று கொள்வேன்"—இப்படி அன்று எனக்குச் சொன்ன காதலர் இன்று என்னையும் மகனையும் பிரிந்து செல்லத் துணிந்தாரே! என வருந்திச் சோர்ந்தாள் தலைவி.

தலைவன் செலவுக்கான ஏற்பாடுகளை யெல்லாம் செய்து முடித்து விட்டுத் தலைவியிடம் தன் செலவைக் கூறி விடைபெற எண்ணி வந்தான். அவ்வேளையில் தலைவி அடுக்களையில் தன் மகனை வைத்துக்கொண்டு அலுவலாய் இருந்தாள். வந்த தலைவன் "அன்பே!" என அழைத்தான். தலைவனின் குரல் கேட்டாள் தலைவி. தன் செல்வைக் கூறி விடை பெறவே தலைவன் தன்னை அழைக்கிறான் என்பதை உணர்ந்தாள். பிரிவு வேதனையால் அவள் உள்ளம் வெந்து கொண்டிருந்தது. அதனால், கூப்பிட்ட கணவனுக்கு மறுமொழி கூற அவளால் இயலவில்லை. மெல்ல எழுந்தாள். தளர்ந்து நடந்தாள். உளநிலை ஊறு உற்றிருந்ததால் நடக்கவும் முடியவில்லை. அவளது மெல்லிய அழகிய பாதம் நிலத்தில் வடு ஏற்படுத்திட நடந்தாள். அழைத்த கணவனை நெருங்கிச் சென்றாள். அப்பொழுதும் அவள் அவனுடன் ஒன்றும் பேசவில்லை. அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் துணிவும் அவளுக்கில்லை. தன் கூரிய வெண் பற்கள் தெரியுமாறு புன்முறுவல் மட்டும் பூத்தாள். அதுவும் சிறிய அளவிலே தோன்றி வாயினுள்ளேயே நின்றது. அந்த முறுவல் மகிழ்ச்சியால் பிறந்த உண்மைச் சிரிப்பு அன்று. உள்ளத்தில் உள்ளதற்கு மாறாகப் புறத்தே நடிக்கும் பொய் முறுவலாகும். இப்படி வந்து நின்ற தலைவி ஒன்றை நினைத்தாள். முன்பு—களவுக் காலத்தில்—தலைவன் அவளுக்களித்த வாக்குறுதியை—இனி எக்காரணத்தைக் கொண்டும் உன்னைப் பிரியேன்; பிரிவது அறம் அன்று என்று கொள்வேன் என்ற வாக்கினை நினைத்தாள். அன்று அளித்த அந்த வாக்குறுதி இன்று என்ன ஆயிற்று? என்று அவள் கேட்கவில்லை. ஆனால், அந்தக் குறிப்பை மட்டும் உணர்த்துகின்ற ஓவியம்போல் நின்றாள்; பேசாத ஓவியம்போல் நின்றாள். அதுபோது அவள் கண்களில் நீர் நிறைந்து கண் பார்வையை மறைத்தது. ஆனால், கண்ணீர் கன்னங்களில் வழியாதவாறு அடக்கிக் கொண்டாள். தன் துயர் மிகுந்த நிலையை செலவுக்கு ஆயத்தமாகி நிற்கும் கணவன் கண்டு கொள்ளக்கூடாதே என்றெண்ணித் தன் தோளில் சாய்த்து வைத்திருந்த அருமை மகனின் தலையில் சூடியிருந்த செங்கழுநீர் மாலையை முகர்ந்தவாறு முகத்தை மறைத்துக் கொண்டாள். அவளது உள்ளம் வெப்பத்தால் வெந்து கொண்டிருந்ததால் அவள் முகர்ந்த செங்கழுநீர் மாலையும் வாடி அழகிழந்தது.

தலைவியின் இத்தோற்றத்தைக் கண்டான் தலைவன்.

தான் கூப்பிட்ட குரலுக்கு மறு குரலும் கொடுக்காமல் மனத் துயருடன் தலைவி எழுந்ததையும், எழுந்தவள் என்றும்போல் நடக்க மாட்டாது அழகிய மெல்லிய பாதங்கள் நிலத்தைக் கீறி வடு ஏற்படுத்திடத் தளர்ந்து நடந்து வந்ததையும், வந்தவள் தன்னை ஏறிட்டும் பார்க்காமல் உள்ளத் துயரைமறைக்கப்பொய்யாகச் சிறிதளவு முறுவல் பூத்ததையும், 'பிரிவது அறம் அன்று' என்று முன்பு—களவுக் காலத்தில்—சொன்ன சொல்லை நினைத்துக் கொண்டு ஒரே பொருளை உணர்த்துகின்ற ஓவியம் போல் நின்ற நிலைதனையும், அந்தத் துயர் நிலையிலே கண்களிலே நீர் மல்கியதையும், மல்கிய நீரை அடக்க எடுத்த முயற்சியையும், தன் நிலை தெரியக் கூடாதே என்றெண்ணித் தன் தோள்மீது சாய்ந்திருந்த மகனின் தலையில் சூடியிருந்த செங்கழுநீர் மாலையை முகர்ந்து தன் நிலையை மறைத்ததையும், முகர்ந்தவுடன் மாலை வாடி அழகழிந்ததையும் கண்டான் தலைவன். தான் உடனிருக்கும் போதே இவ்வளவு துயரப் படுபவள், மலர் மாலை வாடி அழகழிகின்ற அளவுக்கு வெப்பமான பெருமூச்சு விட்டுக் கலங்குபவள், தான் பிரிந்து சென்ற பின்னர் உயிர் வாழ்வதும் அரிதே என்றெண்ணித் தன் செலவைத் தவிர்த்தான். இவ்வாறு தலைவியின் தோற்றம் கண்டு தலைவன் செலவைத் தவிர்க்கும் காட்சியை,

அளிநிலை பொறாஅது அமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளாள் தமியள் மென்மெல
நலம்மிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூர்எயிறு தோன்ற
வறிதுஅகத்து எழுந்த வாயல் முறுவலள்
கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல்முரம்பு ஆகிய பயம்இல் கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின், அறத்தாறு
அன்றுஎன மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன ஆக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந்து ஒற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணிஉரு இழந்த அணிஅழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே; ஒண்தொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே"

என்ற அகநானூற்றுப் பாடலுள் அடக்கிக் காட்டுகிறார், பாலை பாடிய பெருங்கடுங்கோ எனும் பெரும் புலவர்.

கணவன், தன்னையும் பெற்ற மகனையும் விட்டுப் பிரிந்து போவதை ஆற்றாத மனைவியின் நிலையை விளக்க எழுந்த இந்த அகநானூற்றுப் பாடல் நமக்கு இன்னொரு ஐயப்பாட்டினையும் தந்து நிற்கின்றது.

## பிறப்பு

தஞ்சை வீரியங்கோட்டைத் தி. மு. க. உறுப்பினர் தோழர் கோவிந்தன் அவர்களுக்கு 17—5—58-ல், ஒரு ஆண் மகவு பிறந்து "இளங்கோ" என்று பெயரிடப்பட்டது.

அதாவது, வாழ்க்கையின் அடிப்படைத் தேவை பொருள் தான் என்பதை எவரும் மறுக்கார். அப்பொருளைத் தான் இருக்கும் இடத்திலிருந்தே தேட முடியாத நிலை ஏற்படின், வேற்றிடம்சென்று தேடியாக வேண்டு மென்பதையும் எவரும் மறுக்கார்.

இப்படியொரு நெருக்கடியான நிலை உண்டாவதைத் தடுக்க வேறு வழி ஏதேனும் உண்டோ என்று ஆராய வேண்டிய கட்டத்தைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ ஏற்படுத்தி விட்டார்.

வாழ்க்கையின் முதற் பெருந் தேவையான பொருளைக் குடும்பத் தலைவனே தேடியாக வேண்டும் என்ற ஏற்பாட்டை ஒப்புக்கொள்பவர்கள், மனைவி மக்களை விட்டுக் கணவன் பிரிந்து போவதைத் தவருகக் கருத மாட்டார்கள்.

மனைவியைப் பார்த்துக் கொண்டும், மழலையைக் கொஞ்சிக் கொண்டும் கணவன் பிரியாது உடன் இருப்பானுயின், அனைவருமே உணவின்றி உயிர் துறக்க நேரிடுமன்ருே.

இப்படியொரு இரங்கத்தக்க நிலை ஏற்படுமாயின், இதனை எப்படியாவது — எக்காரணத்தைக் கொண்டாவது தடுத்தாக வேண்டுமென்ற முடிவுக்கு, கணவனிடம் எத்தகைய உறுதிமொழியைப் பெற்றிருந்த மனைவியும் வந்தேயாக வேண்டும். இல்லையேல், பிரியவிரும்பாத கணவனையும் தான் பெற்றெடுத்த குழந்தைச் செல்வத்தையும், தன்னையும் பறிகொடுத்தாக வேண்டுமன்ருே !

மானத்தோடு வாழ, நிலங் கடந்தும் நீர் கடந்தும் சென்று பொருள் தேடலாம். வேண்டுமானுல், கணவனைப் பிரிய உடன்படாத மனைவி அவன் கூடவே செல்லலாம். இஃதன்றி மனைவியின் பக்கத்திலேயே கணவன் காலமெல்லாம் இருக்கவேண்டுமென்றமுறை காலநிலைமையையொட்டிப் பார்க்கும்போது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை.

ஆனுல், இந்த அகநானூற்றுப் பாடல் கணவன் மனைவியரிடையே நிலவக்கூடிய ஒற்றுமையை எடுத்து விளக்க எழுந்த பாடல் தான் என்பதை எண்ணும்போது அந்தப் புலவர் பெருமானின் அறிவின் திறத்தை அளந்தளந்து — அறிந்தறிந்து வியக்க வேண்டியவர்களாகிருேம்.

செல்விருந்தோம்பி வருவிருந்தை எதிர்நோக்கி நிற்கும் தமிழகப் பண்பாட்டிற்குப் பொருள் பெரிதும் இன்றியமையாத ஒன்றன்ருே !

★

# தெரிந்துகொள்ளுங்கள்

உண்மை, அமைதி—இவைகளைச் சித்தார்த்தன் தேடிச் சென்ருன். உறுபெலா என்னும் காடு அவனைப் பெரிதும் கவர்ந்தது. கடுமையான துறவறம் பூண்டு ஆறு ஆண்டுகளை இங்கு கழித்தான். ஆனுல் தேடிவந்த உண்மையோ, நாடி வந்த அமைதியோ அவனுக்குக்கிட்டவில்லை துறவறத்தின் பெயரால் தன்னுடலை வருத்துவதை நிறுத்திக்கொண்டான். சஜாதா என்னும் அழகிய குமாரி ஈந்த அமுதம் போன்ற பாயசத்தை அருந்தினுன். பின்பு, தளரா உறுதியுடன் போதி மரத்தடியில் அமர்ந்தான். தான் விரும்பிய பேருண்மையைக் கண்டான். சித்தார்த்தன் புத்தனுனுன்.

✳

கி. மு-6-ம் நூற்ருண்டை வரலாற்று அறிஞர்கள், "ஓர் அதிசயமான நூற்ருண்டு" என அழைக்கின்றனர். ஏன் எனில், புத்தர், இராக்லிடஸ், இஸா, கான்பூஷியஸ், லா ஓட்சி போன்ற தத்துவஞானிகள் வாழ்ந்தது இந்த நூற்ருண்டில்தான்.

✳

பண்டைய தமிழகம், தங்கம், முத்து தந்தம், மிளகு இவற்றுடன் மயில்களும், குரங்குகளும் கிரேக்கம், எகிப்து, ரோம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது.

ரோமாபுரியை ஆண்ட அகஸ்டஸின் அவைக்களத்திற்கு, ஒரு தூதுகோஷ்டியை அனுப்பினுன் பாண்டிய மன்னன் ஒருவன்.

✳

புத்த மதத்தின் தத்துவத்தை நன்கு உணர்ந்தவனும், பெரும் எழுத்தாளனுமான தர்மபாலன் என்பவன் நாலந்தா சர்வகலாசாலையின் (450-1200 கி. பி.) துணை வேந்தனுக நியமிக்கப்பட்டான். அவன் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவன் என்பதை அறியும்போது நாம் ஆச்சரியப்படவில்லை!

✳

பனியா வகுப்பைச் சேர்ந்த ஹேமு சாதாரண கடைக்காரனுகத் தன் வாழ்க்கையைத் துவக்கினுன். பின்பு தன்னுடைய திறமையினுல் வங்காளத்தின் பிரதம மந்திரியானுன். இரண்டாவது பானிப்பட்டுப் போரில் அவன் அக்பரை எதிர்த்து வெல்லும் தருணத்தில், ஓர் அம்பு அவன் கண்ணில் பாய்ந்ததும் மயக்கமுற்று கீழேவிழுந்தான். அவனுடைய சேனை சிதறி ஓடியது. அக்பர் எளிதில் வெற்றி அடைந்தான்.

✳

சமுகார் என்னுமிடத்தில் ஷாஜஹானுடைய மூத்த புதல்வன் தாராவுக்கும், இளைய புதல்வன் ஔரங்கஜீப்பிற்கும் நடந்த போரில் தாரா வெற்றியடையும்கட்டத்தில்இருந்தான் தாராவின் யானையின்மீது அம்புகள் பாய்ந்தன. அவன் உடனே குதிரை மீதேறி போரிட்டான். அவன் வீரர்களோ, அவன் யானையின் மீது இல்லாததைக் கண்டு இறந்தான் என எண்ணி, பீதியடைந்து போர்க்களத்தைவிட்டு ஓடினர். ஔரங்கஜீப் போரில் வெற்றியும்' முகலாயப் பேரரசின் மகுடத்தையும் பெற்ருன்.

✳

கௌடா வம்சத்தைச் சேர்ந்த சசாங்கன் என்னும் அரசன் புத்த மதத்தை அறவே வெறுத்தவன். அதனுல், அவன் (புத்தர் பேருண்மையைக் கண்ட) போதி மரத்தையே வெட்டி விழ்த்தினுன்.

✳

1857-ல் நடந்த பெரும் புரட்சியில் புரட்சிக் கொடி காட்டிய ஆறு சிறுவர்கள் கொல்லப்பட்டனர். ஆங்கிலசேனையைக் கண்டவுடன், முகங்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்ட பன்னிருவர் தூக்கிலிடப்பட்டனர். அலகாபாத்தில் மட்டும் 6000 பேர் கொல்லப்பட்டனர்.

✳

—"அறத்தமிழன்"

# தமிழர் இயற்கை

(கு. குட்டுவஞ்சேரல்)

செந்தமிழ் பூக்காடாம் நம் நந் தமிழ்நாட்டை சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டுகொண்டிருந்த காலம்! போர்முனைக்குச் சென்று எதிர் வந்த அரசனை வென்று, தம்வீரருடன் வீறுநடை போட்டுத் தன் நாட்டில் வெற்றி விழாக் கொண்டாடிய நேரம்! ஆற்றல் படைத்த அரசரும், அறிவிற் சிறந்த அமைச்சரும், அருந்தமிழ்ப் புலவரும் அரசவையில் கூடி, குற்றங்களைந்து குடிகளைக் காப்பாற்றும் முறைமை தெரிந்து, அறநெறி பிறழாமல் அன்புடன் ஆட்சி நடாத்தும் முறைமையை மிக நுண்ணிதின் ஆராய்ந்து அறிந்து கொண்டிருந்த காலம்! கொள்கையளவில் கோனாட்சி என்றாலும், அது குடி தழுவிய கோனாட்சி முறையில் கோலோச்சி வந்த நேரம்! இவ்வருஞ் சிறப்பியல்புகளையும் சீரிய முறைகளையும், அறநெறியினையும் அறிந்த அக்காலத்து வடநாட்டு ஏகச்சக்ராதிபதியான அசோகன் கூட அச்சமுற்று இங்கு அடி எடுத்து வைக்காத காலம்!

இக்காலத்தில்......!

ஒருநாள் மாலை நேரம். ஆனால் அது மாலை நேரமென்று மற்றுஞ் சிலருக்குத் தெரியாது. ஏனெனில் அது மாரிக்காலம். பின் தெரிந்தது எப்படியெனில், தெற்கிருந்து வரும் தேன் மணக்கும் தென்றலை தன் வீட்டுக்குள் வரவிடாமல், தன் வீட்டுத் தென் வாயிற்படியை மாதர் மறந்தும் திறந்து வைக்காத நேரம்! தென்றலின் குளிர்ச்சியையும், நீலக் கருமேகத்தின் திரு வண்ணத்தையும் கண்டு களித்து களிநடம் புரியும் மயில்கள் தம் தோகைகளைப் பாகையாக விரித்து ஆடாத நேரம்! தெருவில் மக்கள் திரளாக உலவாத சமயம்! மாலை நேரத்தில் வேலையிலிருந்து வரும் மக்கள் தலையெல்லாம் தண்ணீரால் நனைந்து நடுநடுங்கி நடந்து வந்த நேரம்! இந்நிலை இதன் பின் பின்னிலையானது. மாலை மறைந்தது. இருள் எழுந்தது. மதியின் முகத்தை மக்களுக்குக் காட்ட வொட்டாமல் கருமேகம் மையிருட்டாக்கிற்று. இதன் பின் இருள் ஈரிரண்டு சாமங்களாக எண்ணி ஏங்கிற்று. காலை வந்தது. கதிரவனும் கடுகி வந்தான். வந்தவன் தன் பொன்னிறக் கதிர்களால் இம் மண்ணுக்கு மகிழ்ச்சி உண்டாகும் வண்ணம் தண்ணொளி வீசினான்.

மாரிக்காலம் மறைந்தது என்று மக்களுக்குத் தெரிந்தது. மாரியின் பாரித் தன்மையை உணர்ந்து அதை உபயோகப்படுத்தி, இப் பாரிலுள்ள மக்களுக்கு பருத்துண வளிக்க — பல விளைபொருள்களையும் உண்டாக்க உழவர்கள் நிலத்தை உழுதனர். பண்படுத்தினர். பயிரிட்டனர். பயிர் வளர்ந்து வருவதைப் பச்சை நிறம் எடுத்துக் காட்டிற்று. இதைப் பார்த்து பண்பட்ட நெஞ்சங் கொண்ட உழவனின் நெஞ்சமும் மகிழ்ச்சியில் திளைத்தாடியது. திங்கள்கள் சில தேய்ந்தன. அறுவடை நாள் அவனை அணுகி வந்தது. அந்த நாளும் வந்தது. அறுவடை முடிந்தது. உழைத்தோருக்குத் தக்க ஊதியம் தந்தான். அதன்பின் தன் உழவடைகளுடனும் நெல் மூட்டைகளுடனும் தன் வீடடைந்தான். பின் தன் உற்றார்க்கும் தனக்கு தக்க தருணத்தில் உதவி செய்தோருக்கும் உறுபொருள் கொடுத்து உதவினான். தன் மனைவி மக்களுடன் மகிழ்ச்சியில் திளைத்து இல்லற வாழ்வினை இனிது நடாத்தி வந்தான். ஏழைகளுக்கு தன்னால் இயன்ற அளவு ஈகையும் செய்து வந்தான். இன்பமும் பெற்று வந்தான்.

இது மருத நில மக்கள் வாழ்க்கையின் மாண்பு. இஃதே போன்றுதான் மற்ற மூன்று நில மக்களும் தங்களின் தட்ப வெப்ப சூழ்நிலைக்கிசைந்த வாறும் இயற்கையை யொட்டியும் தத்தமது வாழ்வினை ஒழுங்குபடுத்தி வளம் பல பெற்று நலம் பல அடைந்து நல் வாழ்வு வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் இயற்கையின் ஒரு மாறுபாட்டால் நிலங்கள் வேறுபட்டு இருந்தாலும், மற்றொரு மாறுபாட்டால் ஒரு நிலத்திலுள்ள மிருகங்களும் பறவைகளும் மற்றொரு நிலத்தில் போய் நிம்மதியாக வாழ்ந்து வந்தன. இதே போல் ஒரு நில மக்கள் மற்றொரு நிலத்தில் போய் பண்டமாற்று வியாபாரம் செய்தலும், பழக்க வழக்கங்களில் ஈடுபாடு கொண்டு இயற்கையோடு இயங்குதலும், அவ்வந் நிலத்திலேயே வதிதலும் பழந்தமிழ் மக்களின் பண்பாடாம் - தனி இனத்தின் இயற்கையுமாம்.

இவ்வியற்கை ஒற்றுமையையும் நட்பையும் வர்ணிக்கும் முகத்தான் நம் பழம் பெரும் இலக்கிய நூலாம்—புடம் போட்ட தங்கமாம்—புலவரின் பொன்னேடாம் "பொருநராற்றுப் படை" புகழ்கின்றது. அது இது.

"குறிஞ்சி நிலத்திலுள்ள குறவர் நறுந்தேனையும் கிழங்கையும் நெய்தல் நிலத்திலே விற்று அதற்குப் பதிலாக ஆங்குள்ள மதுவையும் மீனின் நெய்யையும் வாங்கும் வழக்கமும்; மருத நிலத்து மன்

அன்பான வார்த்தைகள் கருணை ததும்பும் செயல்கள், பிறரை நோகச் செய்யாத மனோபாவம்—இந்தக் குணங்கள் அத்தனை கடினமானவையல்ல. ஆனால் இவை தரும் பலன் என்றும் நிலைக்கக்கூடியது.

ளர் தித்திக்கும் கரும்பையும் அவலையும் குறிஞ்சி நிலத்திலே விற்று, இவற்றிற்குப் பதிலாக உருசிமிக்க மான் தசையையும் நறுந்தேனையும் பெற்றுக் கொள்ளுதலும்; நெய்தல் நிலத்துப் பரதவர் குறிஞ்சி நிலப் பண் பாடுதலும்; குறிஞ்சி நிலக் குறவர் நெய்தற் பூச்சூடுதலும், முல்லை நிலத்து இடையர் மருதப் பண் பாடுதலும், மருத நிலத்துப் பள்ளர் முல்லைப் பண் பாடுதலும், முல்லை நில வான்கோழி மருதநிலத்தில் உள்ள நெற்கதிரையும்; மருத நிலத்திலுள்ள மனைக்கோழி குறிஞ்சி சார்ந்த முல்லையிலுள்ள தினையையும் கவர்ந்துஉண்ணலும் குறிஞ்சி நிலத்திலுள்ள மந்தி நெய்தலின் கழியில் மூழ்குதலும், நெய்தல் நிலக்கழியிலுள்ள நாரை குறிஞ்சியிடத்து மலையிற் சென்று தங்கி மகிழ்ந்திருத்தலும்" கற்போருக்குக் கற்குந்தோறும் கற்குந்தொறும் கழிபேருவகை பயப்பதாகும். இன்னும் இயற்கையோடு மிகவும் நெருங்கி ஒன்றிப் போய் ஆழ்ந்த சிந்தனையில் பிறந்த சிறந்த கருத்தை சுருங்க அளிக்கும் நம் செந்தமிழ்ப் புலவர்களைப் போற்றுமலிருப்பதற்கில்லை. இப் புலவர்களைப் போற்றி வளர்த்த புரவலர்களையும் புகழாமலிருப்பதற்கில்லை. இவ்விருவரை மட்டுமின்றி மாற்றாரையும் புகழாமலிருப்பதற்கில்லை. இவ்விருவரை மட்டுமின்றி மாற்றாரையும் போற்ற வைக்கும் நமதருந் தமிழ் செழுந் தமிழைச் சிந்தையில் இருத்தாமலிருப்பதற்கில்லை — நினையாமலிருப்பதற்கில்லை. இதோ பாடல்:-

"தேனெய்யொடு கிழங்கு மாரியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்போ டவல் வகுத்தோர்
மான்குறையொடு மது மறுகவும்,
குறிஞ்சி பரதர்பாட, நெய்தல்
நறும்பூங்கண்ணி குறவர் சூடக்,
கானவர் மருதம்பாட, அகவர்
நீனிறமுல்லைப் பஃறிணை நுவலக்,
கானக்கோழி கதிர் குத்த,
மனைக் கோழி தினைக் கவர,
வரை மந்தி கழி மூழ்கக்,
கழி நாரை வரையிறுப்பத்,
தண் வைப்பின் நாடு குழீஇ"

—பொருநராற்றுப்படை.

# மூநகரும் சேறே!

(நெல்லை நல்லான்)

"நாம் சுயராஜ்யம் அடைந்தால், இங்கு தெருவெல்லாம் பாலாறு பாயும், தேனாறு ஓடும்" என்று கூறினார்கள், சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால். ஆனால் இன்று தெருவில் பாலாறு பாயவும் இல்லை, தேனாறு ஓடவும் இல்லை —மாறாகத் தெருவெல்லாம் சாக்கடை ஓடுவதால் சேறாய்க் கிடக்கின்றது! பாலும் தேனும் தெருவில் பாய்ந்து "பாரீர் பாரதத்தின் சிறப்பை!" என்று பாரிலுள்ளோருக்கு காட்ட முடியாவிட்டாலும், சாக்கடையாவது போக வேண்டிய இடத்தில் போகிறதா என்றால் இல்லை. "கடவுளின் மக்கள்" என்று கருதப்படுகிற அரிஜனங்கள் சாக்கடையோடுசாக்கடையாய் வதியும் வேதனைநிலை மாறவே இல்லை. 'சாக்கடையூர்' என்றே ஒரு ஊர் வர்ணிக்கப்படுகிறது! அங்கிருந்துசெய்திகளும் 'அதைப் பற்றி' வருகின்றன!!

பண்டைய நம் தமிழகத்திலும் தெருக்கள் சேறாய்க் கிடந்தனவாம்! அன்றும் சேறு, இன்றும் சேறு— இரண்டுக்கும் உள்ள வேறுபாடு.

*

"மெசபொடாமியாவிலிருக்கும் ஊர் என்னும் நகரத்தில் உள்ள புராதனமான அரண்மனைகளில் சில, தென்னிந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தேக்குமரத்தை வைத்துக் கட்டப்பட்டவை என்று சொல்கிறார்கள். மற்றும் தென்னிந்தியாவிலிருந்து மேல் நாடுகளுக்கு தங்கமும், முத்தும், யானைத் தந்தமும், மயிலும் அனுப்பினார்கள் என்று அறிகிறோம்."

என்று கூறுகிறார் பண்டித நேரு தமது புத்தகத்திலே. அந்த அளவுக்குச்சீரும்சிறப்பும் பெற்று, ஆண்ட மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியமன்னர்கள், அவர்தம் தலைநகரம் சிறப்பின் நிலைக்களமாம் கலைமின்னும் வஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், மதுரை. அங்குள்ள நீண்ட பெரிய வீதிகள் எல்லாம் சேறாய்க் கிடக்கின்றன.

வஞ்சித் திருநகரம், சேரனின் தலைநகரம், வீரத்தின் பெருஞ் சிகரம் — அங்கு வீதிகள் வானம் போல் பரந்து கிடக்கின்றன. விண்முகட்டில் வெண்ணிலவு தனது பால்நிகர் தன் தோற்றத்தால் வீதி முழுவதும் வெள்ளையடித்துக்கொண்டிருந்தது. சாரை சாரையாய் நச்சிலைவேல் கைக்கொள் காளையர்குழாம் வந்து கூடுகின்றது. மகிழ்வும், அவர்கள் பால் குடிகொண்டுள்ளன. விருந்து, அவர்களுக்கு வேந்தன் அளிக்கிறான். எல்லையிலா இன்பம் கொல்லென்ற சிரிப்பின் மூலம் வெளிவருகிறது. வீரர்கள் மதுவை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுகின்றனர். எல்லோரும் மதுக் கிண்ணத்தைப் பெறுகின்றனர் — அருந்துகின்றனர்—களிமிகக் கொண்டு இல்லம் செல்லுகின்றனர்.

இதற்கிடையில் ஒரு சிறு நிகழ்ச்சி—ஆசாரச் செயல்—அன்பின் அடையாளச் செயல், ஒவ்வொரு வீரரும் மதுக்கிண்ணத்தைப் பெற்றபின் — ஒரு விரலின் நுனியால் மதுவைத் தொட்டு, தரையை நோக்கி உதறுகின்றனர், பின்னர் எல்லோரும் ஒரே

நேரத்தில் அருந்துகின்றனர், ஆங்கிலேயர்கள் விருந்தின்போது மதுக்கிண்ணத்தை ஒன்றோடொன்று மோதிச் சிறிது ஓசை உண்டாக்கிய பின்னர் பருகுவதைப்போல!

இப்படி அந்த வீரர் கூட்டம் — அன்பை, பெற்ற மகிழ்வை, உற்ற பூரிப்பைக் காட்டச்செய்த ஆசாரச் செயலால், மதுவை உதறியதால், வஞ்சிமாநகர வீதியெல்லாம் நனைந்துவிட்டனவாம்! பின்னர் வீரர்கள் செல்லுகின்றனர்—வேந்தனின் வேழங்கள் வீதி வழியே வருகின்றன. நனைந்த வீதிகள் வேழங்களின் காலடிபட்டு சேறாகின்றன. விரலால் உதறிய சிலவாகிய மதுத்துளிகள் வானம் போன்ற விரிந்த வீதிகளையே நனைத்து, சேறாகக் காரணமாய் இருந்தது எனில், அங்குள்ளவீரர் தம் எண்ணிக்கைதான்எவ்வளவு? அவ்வீரர்களைக்கொண்ட நாட்டின் வீரம்தான் எவ்வளவு?

சேரனது நகரம் சேறாகிய கதையைச் செப்பிச் சென்றுள்ளார் பெயர் தெரியாப் பெரும் புலவர் —முத்தொள்ளாயிரம் தந்த முனிவர்.

களிகள் களிகட்கு நீட்டத்தம் கையால்க்
களிகள் விதிர்த்திட்ட செங்கள்த்துளிகலந்(து)
ஓங்கெழில் யானை மிதிப்பச்சே றாயிற்றே,
பூம்புனல் வஞ்சி அகம்.

வஞ்சி ஒருவகையில் கழியாகியது. எஞ்சியுள்ள தலைநகரங்களில் காவிரிப் பூம்பட்டினக் கதையை மற்றொரு புலவர் தெற்றெனக் காட்டுகிறார்.

சோழநாடு என்றதும் 'சோறுடைத்து' என்ற எண்ணம் எழும் —அவ்வளவு வளம். காரணம் காவிரி, அதனால்தான் 'வான் பொய்ப்பினும்தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி' என்று உருத்திரங்கண்ணனார்,உணர்த்துகின்றார். காவிரி வளங்காக்கும் சோழவள நாட்டில் அறச்சாலைகள் மலிந்துள்ளன. அங்கெல்லாம் சோறு பொங்கிய வண்ணமேயுள்ளனர். பொங்கி வடித்த கஞ்சித் தண்ணீரை கீழே ஊற்றுகின்றனர். ஓடுகின்றது—ஆறாய் ஓடுகின்றது. அதனால் ஆறுபோன்ற வீதிகள் எல்லாம் ஈரமாகின்றன. அங்கே எருதுகள் ஒன்றோடொன்று சண்டையிடுகின்றன. திவேகமாக, மிக்க பலத்ன் சண்டையிடுவதால்,எருதுகளின் காலால் கடையப்பட்ட வீதியெல்லாம் சேறாகின்றது. படம் பிடித்துக் காட்டுகின்றார் பட்டினப்பாலை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார்-காவிரிப்பூம்பட்டினம் கஞ்சித் தண்ணீரால் கழியாகிய கதையை.

"சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகி"

—பட்டினப்பாலை.

வீதியே நனையும் அளவுக்கு கஞ்சித் தண்ணீர் ஓடினால் எவ்வளவு சோறு சமைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும், அதனால்சோழநாடு எவ்வளவு வளமாய் வாழ்ந்தது என்பதும், எருதுகள் வீதியே கழியாகும்படியாக சண்டையிட வேண்டுமானால் எவ்வளவு நேரம் சண்டையிடவேண்டும்? மேலும் எவ்வளவு பலத்துடன் சண்டையிடவேண்டும்—அவ்வளவு பலத்தோடும், அதிகநேரமும் சண்டையிட வேண்டுமானால் அந்த எருதுகள் எவ்வளவு ஊட்டம்பெற்றவையாய்—இன்று உள்ள நிலைமைக்கு மாறாக இருக்கவேண்டும் என்பதும் ஒருதலை. இரண்டாவது நமது கவனத்தைஈர்ப்பது மதுரை நகரம் சேறாகிய விதம்!

வஞ்சியும் காவிரிப் பூம்பட்டினமும் சேறாகிய கதையைப் பார்த்தோம். பாக்கி பாண்டியனின் மதுரை மட்டுமே. வஞ்சி சேறாகக் காரணம் மறம். காவிரிப்பூம்பட்டினம் சேறாகக் காரணம் அறம். மதுரைமாநகரமோ மனிதனின் ஒருகண்ணாம் காதலின் பொருட்டு சேறாகியுள்ளது.

காதல் மனிதனின் கண் என்றால், ஊடல்தான் அதன் ஒளி, ஒளியில்லாக் கண்ணும், ஊடலில்லாக் காதலும் சிறக்காது—'உப்பிலாப் பண்டம் சுவைக்காது' என்பதைப்போல. அன்று கூடல் மாநகரத்து மங்கையர் எல்லோரும் ஊடல் வசம் கூடியுள்ளார்கள். வழக்கமாக உள்ள ஆடலையும் பாடலையும், காதலரைத் தேடலையும் காணவில்லை. நாயகர்கள் நாயகிகளிடம் நெருங்குகின்றனர். நாசுக்காகப் பேசுகின்றனர். நாயகிகளோ, "கெஞ்சினால் மிஞ்சுவோம், மிஞ்சினால் கெஞ்சுவோம்!" என்பதைப்போல 'கிராக்கியில்' நிற்கின்றனர்! ஊடல் அவர்களை ஆட்டிப் படைக்கிறது. ஆனால் நாயகர்களை வாடல், வாட்டிவதைக்கிறது. நாயகர்கள் திகைக்கின்றனர், திணறுகின்றனர். அடுத்த கட்டம் ஊடல் ஓட வழி தேடல்.

நாயகர்கள் பன்னீரில் சந்தனத்தையும் குங்குமத்தையும் கரைத்துக்கிண்ணத்திலிட்டு விடுகின்றனர். ஆனால் ஊடலில் உச்சாணிக்கிளைசென்றநாயகிகளோஅப்படியே கிண்ணத்தைத் தட்டிப்பறித்து சாளரம் வழியாகக் கொட்டுகின்றனர். இப்படியே வீதியில் உள்ள வீடுகள்தோறும் நடக்கிறது. இப்படிக் கொட்டப்பட்ட சந்தனம் வழியில் விழுந்து வீதியை நனைக்கிறது. வீதிகள்யாவும் நனைந்து கழியாக இருப்பதுடன், சந்தனமும் அதனுடன் சேர்ந்து வழுக்கலை வழங்குகிறது. இதை ஆசையோடு விளக்குகிறார் முத்தொள்ளாயிரம் தந்த வித்தகர்.

மைந்தரோ(டு) ஊடி மகளிர் தமிர்ந்திட்ட
குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறிழுக்கி, எங்கும்
தடுமாறல் ஆகிய தன்மைத்தே, தென்னன்
நெடுமாடக் கூடல் அகம்.

வஞ்சிநகரம் மறத்தால் சேறாகியது. காவிரிப் பூம்பட்டினம் அறத்தால் சேறாகியது. கூடலகம் ஊடலின் திறத்தால் சேறாகியது. இப்படியே பண்டைத் தமிழக வீதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் — மறத்தால், அறத்தால், காதலால் ஆகிய முப்பெரும், மனிதனுக்குத்தேவையான வகையால் சேறாகியுள்ளது. பண்டை இலக்கியங்கள் அடுத்ததை எடுத்துக் காட்டும் கண்ணாடிபோல் காட்டுகின்றன. ஆனால் இன்று தெருக்கள் சேறாகும் கதை—வேதனை தரத்தக்கது. இந்த நிலை மாறாதா? காத்திருங்கள் 'காலம்' கனியும்.

★

சத்துள்ள விதையே ஆனாலும், அதைப் பண்படுத்தப்படாத நிலத்தில் விதைத்தால் பயன் தருவதில்லை; அதன் சத்தும் குறைந்து விடுகிறது. அதுபோலவே, மக்கள் சமுதாயத்திற்குக் கல்வி அறிவு அளிக்காவிடில் மக்களிடம் இயற்கையாக இருக்கும் சக்திகள் குறைந்து பயனற்றவைகளாகி விடும்.

# நிலவும் உலகும்

[ மாண்மகிழன் ]

★

நிலவு கவிஞனுடைய உள்ளத்தில் நிலவும்போது இனிமையும், கனிவும் மொழி வடிவில் எழிலாகத் தெறிக்கிறது! மொத்தத்தில் கற்பனை நெஞ்சங்களில் அது அகப்பட்டுக் கொண்டால் எங்கெங்கோ போகிறது!

குழந்தையின் விழிகளில் அது பட்டுத் தெறித்த மாத்திரத்தில் அழகின் சிரிப்பு கொஞ்சிக் குலவுகிறது! அப்போது குழவியின் முகத்தில் தோன்றி விளையாடும் உணர்ச்சி வடுவுகள் — நினைக்க நினைக்கக் கழிபேருவகையினைத் தருகின்றன!

ஓவியன் விழிகளில் நிலவு எழில் வட்டம் போடும்போது, அவனுடைய நுண்ணிய நோக்கில் மிளிரும் அணியே ஒரு அலாதியானது!

பெருவீடு கமழச் செல்லும் இளைஞர்களுக்கு நிலவு ஒரு கண்கொள்ளாக் காட்சி!

பிரிவுத் துயரில் நைந்துருகும் சுந்தரங்களுக்கு சிந்தையிலே குளிர்மையினைத் தந்து, தேறுதல் கூறவும், ஆறுதல் தரவும் இடையில் துணையாக நிற்கும்போது நிலவினுடைய மாட்சிமை மகத்தானது!

தேன்நிலவு வாழ்விலே ஒரு பெருநாள்! இப்படி எத்தனையோ, நிலவை நினைக்குங்கால்.

இவையத்தனையும் நிலவை நுட்பமாக நோக்கும் நோக்கல்ல!

நுட்பமாக நிலவை நோக்கும் நோக்கே வேறு!

இப்பொழுது நம் நாட்டைப் பொறுத்தவரை அந்த நோக்கு அறவே இல்லையென்றால் தவறாகாது. அடிமைத் தளையில் இருக்கும் நம் நாடு, அந்த நோக்கினை அறியாமல் இருப்பதும் தவறாகாது. ஏனென்றால் உரிமை முதல்; உணர்வு பின்பு.

இதற்குப் பின் நம் நாட்டைப் பார்க்கிறோம். நிலவும் கடவுளாக வணங்கப்பட்டதை எண்ணி அனுதாபப்படுகிறோம்.

நிலவைப் பற்றிய உண்மைகளை அதிகம் ஒன்றும் தெரிந்திருக்கா உண்மையை அறிகிறோம். சரடுகளைக் கண்டு சிரிக்கிறோம்!

அதே நேரத்தில் நிலவை மையமாக வைத்து அன்றே வளர்ந்து செழித்திருந்த கலையழகைக்கண்டு களிப்படைகிறோம்!

தகுந்த இடைநேரங்களில் கடல் நீர் எழுவதும் விழுவதும் நிலவினால்தான் என்பதை நம் முன்னவரே உணர்ந்திருந்ததை எண்ணிப் பூரிக்கிறோம்!

அந்த உண்மையை, பவுண்டி விரிகுடாவில் அதிகப்படியாக நாற்பது அடி உயரம் நாடோறும் கடலலைகள் எழுந்து விழுவதிலிருந்தும், மத்திய திரைகடலில் குறைந்தபடியாக மூன்று அல்லது நான்கு அடியேனும் கடலலைகள் நாடோறும் எழுந்து விழுவதிலிருந்தும், இன்று நாம் நம் இரு கண்களாலும் காணுகின்றோம! களிப்படைகின்றோம!

நிலவின் சலனத்திற்குத் தக்கவாறு கடல் இயங்குவதை ஆணித்திறமாக நம்புகிறோம்! பூரிக்கின்றோம்!

இந்த நேரத்திலும் 'சந்திர பகவான்!... அப்படி இப்படி என்று கத்தும் புரட்டர்களைக்கண்டு விலாவொடியச் சிரிக்கிறோம்!

அன்புப் பார்வையினை அந்த அப்பாவிகள்மேல் வீசி அறிவுலகத்திற்கு அழைக்கிறோம்!

புழுதியை வாரித் தூற்றிக் கொண்டே நம்மைத் தொடர்கிறார்கள்! புதிய உலகத்தைக் காணுகிறார்கள்! கருந்திரை கிழிபடுகிறது!

நிலவை எட்டிப் பிடிக்கக் கிளம்பும் வீரர்களைக் காணுகிறார்கள்!

நிலவைப் பற்றிச் சந்தேகத்தில் இருந்த உண்மைகளை சுடரொளியோடு நோக்குகிறார்கள்!

மண்ணுக்கும் மதிக்கும் உள்ள தொடர்பு நெடுநாட்கள் துலங்கப்படாமல் இருந்து, இன்று துலக்கப்படுவதை எண்ணி மகிழ்கிறார்கள்!

நிஷ்டை, ஞானம்—ஆஸ்ரம அந்தம்—சிடகோடிகள் துணை-பரமன் சினேகிதம் இவை யொன்றுமே இல்லாமல் மண்ணுக்கும் மதிக்கும் உள்ள தொடர்பை விளக்கும் டாக்டர் பால்ஃபூட் அவர்களின் திறனைப் பெருமையோடு நோக்கி, தெளிந்து 'ஆஸ்ரம அனர்த்தங்க'ளைச் சாடுகிறார்கள்!

புராணம் போடும் புரட்டுகளை அம்பலப்படுத்துகிறார்கள்.

டாக்டர் பால்ஃபூட்டை ஆசையோடும் மதிப்போடும் நோக்குகிறார்கள். பூமியின் விசைக்கும் இழுக்கும் சக்திக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் படித்து தக்கவாறு அமைக்கப்பட்ட அவருடைய தனிப்பட்ட நூதனக் கருவியைக் கூர்ந்து கவனிக்கிறார்கள். அக்கருவியின் உதவியினால் மண்ணுக்கும் நிலவுக்கும் உள்ள தொடர்பை பால்ஃபூட், பிட்ஸ்பர்க் நகரம் நிலவின் பிரத்யேக சக்தியினால் 13 அங்குலத்தினின்று 23 அங்குலம்வரை தினசரி எழுந்து ஆழ்வதைச் சுட்டிக் காட்டி விளக்கிய விந்தையை விண்ணளாவப் புகழ்கிறார்கள்.

அத்தகைய தலைப் பெரும் சக்தியைச் சுருக்கமாக நிலவின் நகர்வு அல்லது சலனம் என்று ஆதார

பூர்வமாக வரையறுத்துக் கீர்த்தியை தகைமையை வாயார வாழ்த்துகிருர்கள்.

பால்ஃபூட்டைப் பின்பற்றி டாக்டர் டி. ஏ. லேன் ஆராய்ச்சியில் இறங்கினுர். அவர் வானநூலில் மாபெரும் விற்பன்னர். லாஸ் ஏன்ஜில்ஸ் நீர் தேக்கத் துறையில் பணியாற்றி வந்தவர். ஒருநாள், கிணறுகளில் நீர் ஏறியும் இறங்கியும் காணப்படுவதைக் கண்டு திடுக்கிட்டார்!

ஆராய்ச்சிகளைத் துவக்கினுர். ஆயிரக்கணக்கான கிணறுகளில் பதிவுப் பொறிகளைப் பொருத்தினுர். கிணறுகளில் உள்ள நீர் மட்டம் கடலலைகளைப்போல விழுந்து எழுவதைக் கண்டார். அவ்வலைகள் கடலலைகளைக்காட்டிலும் குறைந்த விசையில் செல்வதை அறிந்தார்.

இப்படி ஆய்ந்து கண்ட உண்மைகளை வெளியிட்டதைக் கண்டு 'சிகாமணிகள்' மெய்சிலிர்க்கிருர்கள்.

*

நிலம், நீர் இவற்றைப் பாதிக்கும் நிலா உயிரினங்களையும் பாதிக்கிறது என்பதை நினைக்குங்கால் விந்தைதான் மேலிடுகிறது!

கருவில் வளரும் உயிரினங்கள் உண்டாவதற்கு நிலவும் காரணம் என்று கூறப்படுகிறது.

மனிதர்களுக்குச் சில திறப்பட்ட பிணிகள் உண்டாவதும் நிலவினுல்தான் என்று பகரப்படுகிறது. அத்தகைய பிணிகளில் முன்ஸ்ட்ரக், லூனடிக் என்பவை குறிப்பிடத்தக்கன.

வழுக்கைத் தலைகளுக்கு நிலவொளி ஒரு மாற்று என்றும், ஆனுல் அதுவே முழுமாற்ருக அமையாது என்றும் சொல்லப்படுகிறது.

குதிரைகளுக்கு மாலைக்கண் என்னும் வியாதி உண்டாவதும் நிலவின் சலனம் படுவதால்தான்!

டாக்டர் ஆர்வெள்சாப்லி என்னும் புகழ்பெற்ற அமெரிக்க விஞ்ஞானி கடல் மீன்கள் நிலவால் பெரிதும் பாதிக்கப்படுவதாக ஆய்ந்து கூறியுள்ளார். குறிப்பாக மீன்களின் உணவு, சலனம் இவற்ருேடு நிலவு பெரும் தொடர்பு கொண்டுள்ளதை வெளிச்சத்திறகுக் கொண்டு வந்தார்.

கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண் கப்பல் தளத்தின்மேல் இரவெல்லாம் விழுந்து கிடந்த மீன் ஒன்றைச் சமைத்துத் தின்ருளாம். அதனுல் அவளுக்குப் பெரும் வயிற்று வலி வந்துவிட்டதாம். முடிவில் அவள் முகம் வீங்கிப்போய், கண்களே போய்விட்டனவாம்! இந்தச் சம்பவத்தை பர்சியன் விரிகூடாவில் கண்டதாகப் பிரயாணங்களைப் பற்றிச் சுவை சொட்டச் சொட்ட எழுதும் இதா அர்ஸ்ட் என்னும் பிரபல எழுத்தாளர் குறிப்பிடுகிருர். இதினின்று மீன் நிலவொளியால் எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறதல்லவா?

கடலுக்குள் இருக்கும் பல வகைப்பட்ட பிராணிகள் நிலவால் பாதிக்கப்படுகின்றன. அத்தகையவற்றுள் 'பலோலாஸ்' என்னும் புழு முக்கியமானது. இத்தகைய புழுக்கள் சாமோ என்னும் தீவில் அதிகம் இருக்கின்றனவாம்!

பொங்கல் நாள் நமக்கு எத்தனை இனிக்கிறதோ அத்தனை பெரும் புழு நாள் சாமோ மக்களுக்கு இனிக்குமாம்!

நவம்பர் மாதத்தில் — பௌர்ணமி தோன்றும் கடை நாளில் மைரியட்ஸ், பலோலாஸ் எனப்படும் புழுக்கள் இருப்பிடத்தைவிட்டு வெளியேறுமாம்! இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் — பௌர்ணமி நாளில் நடப்பது வாடிக்கையாம்! இந்த நாளில் அங்குள்ளோர் கூடைகளுடன் கிளம்பி, வெளிவந்த புழுக்களை வாரி வந்து, சமைத்து, பழமா இலைகளில் வைத்து வயிருர உண்பர்களாம்! இப்படி வருஷத்துக்கு ஒருமுறை வரும் அந்த நாளைத்தான் பெரும் புழு நாள் என்று அங்குள்ள காலண்டர்களில் குறிக்கப்பட்டிருக்குமாம்!

சில இடங்களில் உள்ள மிருகங்கள் பௌர்ணமி நாட்களில் உறங்காதாம்.

பசிபிக் கடற்கரை ஓரம் வாழும் பலதிறப்பட்ட உயிரினங்கள் நிலவால் பாதிக்கப்படுகின்றனவாம்!

அங்குவாழும் பில்லியம் என்னும் ஒருவகைப் பிராணி நிலவு இல்லாத இரவு நேரங்களில் மட்டுமே வெளிவருமாம். பகல் நேரங்களிலும், நிலவு காயும் நேரங்களிலும் அப்பிராணி வெளிவருவது இல்லையாம்!

உயிரினங்களின் இனவிருத்தி சம்பந்தமாகவும் நிலவு முக்கிய இடத்தைப் பேறுகிறது. ஜாகப் என்பவர் நிலவின் சலனங்களை கூர்ந்தறிந்து, உயிரின்விருத்தியை அதிகமாக்கி வெற்றி கண்டிருப்பதாகவும் பைபிளில் ஒரு குறிப்பு இருக்கிறது.

ஜாகப்பின் முறைகளைப் பின்பற்றிப்பல நூற்ருண்டுகளுக்குபின், 1913-ஆம் ஆண்டில் பி. எச். மூர் என்பவர் உயிரின விருத்தியில் வெற்றியும் கண்டிருக்கிருர்.

தாவரங்களின் வளர்ச்சியையும் நிலவு பாதிக்கிறது என்பதை ஸ்டிவன்ஸ் என்பவர் அருமையாக நிரூபித்தார். அவர் பட்டாணி, தக்காளி, அவரை போன்ற தாவரங்களை பௌர்ணமிக்கு இருநாட்களுக்கு முன்னரும் இருநாட்களுக்கு பின்னரும் நட்டுவைத்து, அவற்றின் வளர்ச்சியை மிகநுட்பமாகக் கவனித்தார். முழுநிலவுக்கு முன்னர் நடப்பட்ட தாவரங்கள் பலனை அதிகமாகவும், முழுநிலவுக்குப் பின்னர் நடப்பட்ட தாவரங்கள் பலனைக் குறைகாகவும் தந்ததை உணர்ந்தார். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் நிலவுதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

★

உனக்கு ஏதாவது ஆபத்துவரும்போது உனது உறவினர்களின் போக்கை நன்கு கவனி; உனக்குப் பயத்தை அளிக்கும் சந்தர்ப்பங்களில் உன்னுடைய மெய்க்காவலர்களின் செயலைக் கவனி; நீ தரித்திரத்தில் மூழ்கித் தவிக்கும்போது உன்னுடைய மனைவியின் நடத்தையை ஆராய்ந்து பார்!

# இழந்தோம்

( அரங்கண்ணல் )

கனி கொய்திடும் வேளையில் கருநாகம் தீண்டுவதுபோல, இயக்க வளர்ச்சி கண்டு பெருமிதங்கொள்ளும் நம்மை, ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டது, அண்ணன் பி. பா. அவர்களின் மறைவு.

தென்னுட்டில் புத்துயிர்ப்பு உண்டு பண்ணிய நீதிக்கட்சியின் பால் நீங்காத் தொடர்பு கொண்டிருந்த அவர், சில ஆண்டுகளாக தி. மு. க. - விடம் காட்டிய ஆர்வமும் பரிவும் மிக அதிகமாகும். "என்னடா தம்பி!" எனத் தனக்கே உரித்தான கொச்சைத் தமிழில், இச்சையையெல்லாம் கூட்டியெடுத்து, வழங்குவார் நம்மவர்களைக் காணும்போது. கடந்த ஓராண்டில் கழக உறுப்பினருமாகி, விடுதலை முரசு கொட்டுவோரைக் கண்டு மகிழ்ந்தார்! சில காலமாகவே அவரது உடல் நலம் கெட்டிருந்ததெனினும், வளரும் கழகம் பற்றிய ஆனந்தமே, அவருக்கு அருமருந்தாக இருந்ததென்பதை சென்னையில் உள்ளோர் அதிகம் அறிவார்கள்!!

சீமான்களும் பூமான்களும் உலவிய நேரத்திலும் சரி, மாளிகையிலிருந்த கட்சி மக்கள் மந்திக்கு இழுத்து வரப்பட்ட இப்போதும் சரி, என்றும் அவர் தொண்டர்களின் துணைவனுகவே நின்ருர்! சேவை செய்வோரின் சிறந்ததோர் நண்பனுகவே விளங்கினுர்! கவர்னருக்கு கைலாகு கொடுத்த அவரது கரங்கள், கனிவுடன் ஒரு கட்சித் தோழரின் முதுகில் தட்டும் போதுதான், முழு இன்பத்தையும் பெற்றது எனலாம். அவரால் பலருக்கு, பலவகையில் இலாபங்கள் ஏற்பட்டதுண்டு! அவரை ஏணியாகப் பயன்படுத்தி, ஏற்றம் பெற்ருேர் ஏராளம்! எனினும் அவர் எப்போதும் "தேவை', யெனும் தேள் கொட்டும் நிலையிலேயே வாழ்ந்தார்—அவ்விதமே இறக்கும்வரையிலும் இருந்தார் என்பது சிந்தை நோக வேண்டிய செய்தியாகும்.

'ஜஸ்டிஸ்' கட்சியின் முத்திரையுடன், சன்னத்தும், விருதுகளும், வியாபார வேட்டையில் வெற்றிகளும், அடைந்தோருண்டு. அவர்களில் பலர், இன்று, அந்தக் கட்சியினை மறந்து இப்போதுள்ள ஆளும் கட்சியின் தாசர்களாகவுமாகி, அப்போதிருக்கும் சுகம் எள்ளளவும் மாருத நிலையினை இடைவிடாமல் அனுபவிப்பதே "பொதுப் பணி" என்று இருந்து வருகின்றனர். அண்ணன் பி. பாலசுப்பிரமணியம், அப்போதும் சரி, சாகும்வரையிலும் சரி, சுயநலத்துக்காகக் கொள்கையை இழந்ததுமில்லை! சுகபோகத்துக்காகக் கூடுவிட்டுக் கூடுபாயும் செயலுக்கு ஆளானதுமில்லை!! கொண்ட கொள்கையில் அவர் காட்டிய உறுதியும், திராவிட சமுகத்தின் நலனில் அவர் கொண்டிருந்த அக்கரையுமே, கடந்த பொதுத் தேர்தல்களின்போது ஓட்டுகளைக் கொண்டுவந்து குவித்தது. காங்கிரசுக்கு 'கனமான' மோடார்கள் ஓடின! பணம் பாய்ந்தது, வெள்ளம்போல! இவருக்கோ ஏழை 'ரிக்ஷா'க்காரர்களும்—டாக்சி ஓட்டி வயிறு வளர்ப்போரும் — குப்பங்குடிசைகளில் வாழ்வோருமே துணையாக நின்று, பணியாற்றி, "வெற்றி பெறுவது இவர்தான்!", என்று சென்னையே பரபரப்பு அடையும் படியான அளவுக்கு வாக்குகளைப் பெற்றுக் காண்பித்தார். அப்படிப்பட்ட ஒரு அஞ்சாநெஞ்சரை, அடுத்த முறை டில்லிக்கு நிச்சயம் அனுப்பிவிட முடியும், டில்லிச் சபையிலே அவரது சிங்கநாதம் ஒலிப்பதை நிச்சயம் கேட்போம் என்று நாம் கொண்டிருந்த ஆசையில், மண்விழுந்துவிட்டது. சாவு, அவரைத் தட்டிப் பறித்துக் கொண்டுபோய் விட்டது!!

என்ருவது ஒருநாள், நாமெல்லோரும் இறக்கத்தான் போகிருேமெனினும், இதுபோல் ஏற்படும் சாவுகள் நம்மை ஒரு ஆட்டு ஆட்டவே செய்கின்றன! வெயிலில் வாடுபவனுக்கு ஒரு தருவைப் போலவும், அரசியல் புயல் அடிக்கும் போது ஆறுதல் பெறும் ஒரு இடமாகவும், விளக்கமும் வரலாறும் பெறும் உருவமாகவும், விளங்கியவர் அவர். இந்த இழப்பை ஈடு செய்து தர யாருள்ளனர் என்று எண்ணும்போது, கண்கள் அருவியாகின்றன! மறைந்த மூத்தவரின் புன்சிரிப்பும், குறும்புக் கண்களும், நினைவில் மின்னி மீளாச் சோகத்தை மேலும் மேலும் தருகின்றன!!

"சேலம்" நடந்தபோது, நம்முடன் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தபோதிலும், அவர் நமது கொள்கையிலே தியாகமும் தன்னலமற்ற தன்மையும் குடிபுகும் திட்டத்தைக் கண்டதும், அவர் மனம் மகிழ்ந்தார். வயதிலும் அனுபவத்திலும் எவ்வளவோ மூத்தவராக இருந்தும "அறிவகத்தை", தனது தலைமைநிலையமாக ஏற்ருர்! அங்கிருந்துவரும் ஆக்ஞைகளைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும், அதுதான் "கட்சிக் கட்டுப்பாடு" என்று தான் நடாத்திய ஆங்கில ஏடாம் "சண்டே அப்சர்வர்" மூலம், சொல்லிக் கொண்டே வந்தார். அந்த ஏடு, எவ்வளவோ புயல்களுக்கிடையிலும் இலண்டன் வரையில் நமது எண்ணங்களைச் சுமந்து செல்லும் வாய்ப்பைப் பெற்றது அவரால்! பெரிய பெரிய இடங்களுக்குள் எல்லாம் நுழைந்து ஒரு கலக்குக்கலக்கும் எழுத்தாற்றலைப் பெற்றிருந்தது!! "சிறு பொறி பெருந்தீ" எனும் குறிக்கோளைக்கொண்டு, உலவிய அந்த ஏட்டில் அண்ணனின் எழுத்துக்களைக் காணமுடியாது இனி என்றெண்ணும்போது, கரையிலாத் துக்கமே கொள்கிருேம். இனி, என்று காணப்போகிருேம் அவரை! எப்போது படிக்கப்போகிருேம் அவரது எழுத்தை!!

தோழர்களுக்குத் துணைவராகவும், நாடி வருவோருக்கு நல்லதோர் கலங்கரை விளக்கமாகவும் இருந்த அவரின், அன்பும் ஆதரவும் இனிக் கிடைக்காதே என்று எண்ணி ஏக்கமுறுவோர் ஏராளமுண்டு. அவர்கள் எல்லாம் இன்னும், பெருமூச்சுடனும், பேச இயலாத் துக்கத்தோடும் விம்மிய வண்ணம் உள்ளனர் என்பதை அறிவோம். அவர்களது கண்ணீரோடு நாமும் பங்குகொள்கிருேம்—அவர் விட்டுப்போன பணியைத் தொடர்ந்து செய்வோம்! அவரது ஆசைகள் நிறைவேறப் பாடுபடுவோம். வாழ்க அவர் பெயர்! வளர்க அவர் பாடுபட்ட கொள்கைகள்!!

★

# இஸ்ரேல்!

(ச. வெ. பாண்டியன்)

"பேதைகாள்! என்ன புத்தி உங்களுக்கு! நாட்டைத் துண்டாக்கத் தூண்டுகிறீர்களே! சின்னநாடு தனித்து வாழ முடியுமா?" என்று சுடுசொல் வீசுவோருக்குச் சவால் விடுவதுபோல இஸ்ரேல் தனது பத்தாவது விடுதலை விழாவை ஏப்ரல் 24ம் தேதியன்று எழுச்சியூட்டும் விதத்தில் கொண்டாடியிருக்கிறது!

"சிறுநாடாம் "இஸ்ரேல்" இன்று தனது பத்தாவது வருடாந்தர விழாவைக் கொண்டாடுகிறது" என்று "இந்து" ஏடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுக் காட்டுகிறது. குறைந்த மக்கள் தொகை கொண்டது இஸ்ரேல்! இவ்வருடம் 'மார்ச்சு' மாதம் முடிய எடுத்த கணக்குப்படி அங்குள்ள மொத்த மக்கட் தொகை 1990000 பேர்களேயாகும்!

'இவ்வளவு சிறு நாடா' என்று மூக்கில் விரலை வைப்பதற்கு முன் அது இருக்கும் இடத்தையும், அங்கு உருவாகி வருகிற சூழ்நிலைகளையும் ஒருகணம் சிந்தித்துப் பார்ப்போருக்கு திகிலையே உண்டாக்கும்.

'மத்தியகிழக்குப்பகுதி' என்றாலே போரின் அபாயப் பகுதி என்பர் -அரசியல் வல்லுநர்கள். இஸ்ரேல், அரேபியா நாடுகளிடையே உண்டாகும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு அமெரிக்காவும், பிரிட்டனும், ருசியாவும் போட்டி போட்டுக்கொண்டு தங்களது பலத்தைப் பெருக்கி வருகிறது. இது மாத்திரமல்லாமல் இஸ்ரேல் - எகிப்து எல்லைத் தகராறு, இஸ்ரேல்—ஜோர்டன் தகராறு தீர்வுபெறாத இந்தியா—பாக்கிஸ்தான் எல்லைச் சிக்கல்போல்இருக்கிறது. இவ்விதமான இடத்திலிருந்து கொண்டுதான்—சிறு நாடும் தனித்து வாழ முடியும்; கரடிகளும், சிங்கங்களும் உலவினாலும் பசுவும் வாழமுடியும், வலிமைமிக்க வல்லரசுகள் தலையிட்டாலும் வலிமையற்ற 'இஸ்ரேல்' வாழமுடியும் என உலகிற்கு எடுத்துக்காட்டி விழாக் கொண்டாடுகிறது! பத்து ஆண்டுகள் ப்பாரீர் எனப் பரவசப்படுகிறார்கள்!

'நியூயார்க்டைம்ஸ்' இதழில் அதன் பிரதம மந்திரி "டேவிட் பென்குரின்" குறிப்பிட்டுள்ளதைபோல அந்நாட்டின் விடுதலை வரலாறும், முதல் பத்தாண்டுக் கால வாழ்வும் மற்ற நாட்டைவிட முற்றிலும் மாறுபட்டதாகும்!

ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமையாக்கி ஆண்டுவந்தால் அடிமைப்பட்ட நாடு தனது புரட்சியின் மூலமோ. அல்லது மனமொத்த ஒப்பந்தத்தின் மூலமோ தனது அடிமை விலங்கை உடைத்தெறியும். வரலாற்றில் விடுதலைப் பாதை இப்படித்தான் இருக்கும் —எல்லா நாடுகளிலும். ஆனால் இஸ்ரேலிலோ அப்படியல்ல! அது முதலில் தனது நாட்டினின்றும் வெளியேற்றபபட்டு மூலைக்கொன்றாகக் கிடந்த தன் இன மக்களைத் தன்னகத்தே இழுத்து அதற்குப் பின் போராட வேண்டி இருந்தது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாடோடிக் கூட்டத்தவராக — நாடற்றவர்களாக வாழ்ந்து வந்தவர்கள்—இந்த யூதர்கள். தன் இனப்பற்று அழிந்து, மொழியை மறந்து காடோ, மலையோ என உலகெலாம் அலைந்து திரிந்தவர்கள்!

இச்சூழ்நிலை காலம் செல்லச் செல்ல மாறலாயிற்று. மேனாடுகளில் கல்வி பயின்ற சிலயூதர்கள் தன் இனத்தின் பரிதாப நிலையையும், தம் மொழியாம் "ஈப்ரு" பேச்சுவழக்கினின்றும் அழிந்துவரும் தன்மையையும் கண்டு மாற்றியமைக்கமுற்பட்டனர். தம் தாயகத்தை நினைத்தனர். அத்தாயகத் திருநாட்டில் குடியேறித் தமது கலாச்சாரம், கலை, பண்பு மொழி ஆகியவற்றைப் பாதுகாக்கப் பெரிதும் விரும்பினர். இவ்விழைவு 1878-ம் ஆண்டிலிருந்து வேகமுறலாயிற்று. அன்றிலிருந்து கற்றறிந்தோரின் தொகை கூடலாயிற்று-குடியேறினவர்களில்! இதே ஆண்டில் அப்பொழுது இருந்த மொத்த மக்கட் தொகை 60,000 பேர்களேயாகும்.

படிப்படியாக குடியேறினவர்களின் தொகை பெருகலாயிற்று. பின்னர் ஒன்று சேர்ந்து "துருக்கி"ய ஆதிபத்திய ஆட்சியினின்றும் விடுதலை பெறப் பாடுபடலாயினர். இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட 'இஸ்ரேல்' பகற்கனவு எனப் பேசப்பட்டது. ஏன் இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபோதும்கூட "எங்கே இஸ்ரேல்" என்று அதட்டிக் கேட்கப்பட்டது. என்றாலும் இவர்கள் குரல் உலக மன்றத்திற்கு எட்டலாயிற்று. "யூதர்களின்" முறையீடு பயன் பெறலாயிற்று. ஆமாம்! உதயசூரியன் உதித்துவிட்டான். 1947-ம் வருடம் நவம்பர் மாதம் 29-ம் தேதி ஐ. நா. பொதுச் சபை "இஸ்ரேல்" என்ற நாடு இருக்க - வாழ — தனியாட்சி செலுத்த உரிமையளித்தது.

கருத்துள்ள பெண், உடலில் வீரமும் உள்ளத்தில் கூச்சமும் உள்ள வாலிபனையே விரும்புவாள்; கருத்தற்ற பெண், உடலின் பளபளப்பும், உதட்டில் புன்சிரிப்புப் பேச்சும் உள்ள ஆடவனிடம் தன்னையே பறிகொடுத்து விடுவாள்.

இதோடு அதன் விடுதலை அத்தியாயம் முடிந்துவிடவில்லை. இதற்குப் பின் கிட்டத்தட்ட ஒரு வருட காலம் வரை அது 'அரேபி ர்'களுடன். போராட வேண்டி இருந்தது. கடைசியில் விடுதலை முரசு 1948 ஏப்ரல் 24-லில் முழங்க லாயிற்று.

விடுதலை கிடைத்ததும் அதன் வாழ்வு இனிமையாக இருந்திட வில்லை. அரபிய நாடுகளின் எல் லைத் தகராறுகள் ஒரு பக்கமும், எகிப்துமீது பிரிட்டனின் கண் மூடித்தனமான தாக்குதல் மறு பக்கமுமாக, இவைகளுக்கிடையில் அது தொல்லைப்பட வேண்டிய தாயிற்று. எனினும் இவ்வளவு இன்னல்களினூடே தனது நாட்டு வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தியே வருகிறது.

விவசாயத்தைப் பெருக்குதல், வீடு கட்டுதல் ஆகியவை அங்கு இன்றியமையாததாக இருப்ப தால்; இதுவரை 5 லட்சம் வீடு களும், $2\frac{1}{2}$ லட்சம் உழவர்களும் யார் செய்யப்பட்டிருக்கிறார்கள். உழவர்களுக்கென 500 உழவர் குடியேற்றங்களும் ஆங்காங்கு உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ண்படுத்தப்பட்ட நிலம் 195000 ஏக்கர்களிலிருந்து 950000 ஏக்கர் களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ன்றுகளும், மண் பிரதேசங் களுமாக உள்ள "இஸ்ரேல்" டெங்கும்—மலை — மணல் பிர தேசம், பெருஞ்சாலையோரங்கள் ங்கணும் இலட்சக்கணக்கான ங்கள் நடப்பட்டுள்ளன.

இதுமாத்திரமல்லாமல் கல்வி வளர்ச்சியில் சிறந்த பொறுப்பேற் ப் பணியாற்றுகிறது-அந்நாடு! 49-ம் வருடம் செப்டம்பர் மாதத் ல் ஏற்படுத்திய சட்டத்தின்படி வயதிற்கும் 14 வயதிற்கும் உட் டவர்களுக்கு கட்டாயக் கல்வி டைமுறையில் இருந்து வரு றது. 1949-ல் பள்ளி செல்வோர் தொகை 180844 (இதில் 6780 ர் அராபியர்கள்) ஆக இருந் து. இன்று 404900 (27500 பேர் ராபியர்கள்) ஆக உயர்ந்துள் து!

இவண் ஒரு பல்கலைக் கழகமும், தொழில் நுட்பக் கல்லூரியும் படுத்தப்பட்டுள்ளன. வருட டம் 1200 புதிய புத்தகங்கள் ரு" மொழியில் வெளிவந்த இருக்கின்றன!

இயற்கை வளத்திற்கும் குன்றி வில்லை எனலாம். சிறப்பாக எண்ணெய், மைக்கா, இரும்பு, புரோமின், பொட்டாஸ், காஸ்டிக் சோடா, மெக்னீசியம், பாஸ்பேட், மாங்கனீஸ்......போன்ற தாதுப் பொருள்கள் நிறைய இருக்கின் றன. இவற்றைப் பயன்படுத்தும் தொழிற்கூடங்களும் ஆங்காங்கு எழுந்தவாறே உள்ளன!

தவழும் குழந்தை 'இஸ்ரேல்' என்றால் வளர்ந்துள்ள மனிதன் 'திராவிடமாகும்'. மக்கட் தொகை யில் மாத்திரமல்ல வளம்-வாய்ப்பு — வரலாறு — எல்லாவற்றிலும் எத்தனையோ மடங்கு 'திராவிடம்' உயர்ந்தது! பெரியது! திராவிடம் ஏன் தனித்து வாழமுடியாது?

★

# ஐயகோ!

இருபதுபேர் மாண்டனர்.

கொள்ளை.

கொலை.

அட்டகாசம்.

இரயில் கவிழ்ந்தது.

தந்திக்கம்பிகள் அறுபட்டன.

இப்படிப் பீதியூட்டும் செய்தி களைப் பெறுகிறோம், இலங்கைத் தீவிலிருந்து! அண்ணன் தம்பி களைப்போல் வாழவேண்டிய சிங் களவர்களுக்கும் தமிழர்களுக்கு மிடையே ஏற்பட்டுள்ள "கலாம்" இந்தளவுக்கு வேதனையூட்டும் விபரீதங்களை உண்டாக்கியிருப்ப தாகக் கேளவிப்படக் கேள்விப்பட இதயம் துடிக்கிறோம்!! வளரும் உலகில் ஒவ்வொருவரும் தத்தம் மொழியினையும், தாம் வாழுமிடத் தில் தமக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளையும் நிலைநாட்டிக் கொள்ள முயலுவது, தவறல்ல. ஆனால், இலங்கையில், இந்த அடிப்படை உரிமைகள் நெடு நாட்களாகவே தமிழர்களுக்கு மறுக்கப்பட்டு வருவதெனபது, இடைவிடாத கூக்குரலாகும்: நேருவின் நண்பரான இலங்கை முதல்வர் பண்டாரநாயகா, இதனை அளிக்க முன்வராததால், தமிழர்கள் இந்தளவுக்குப் படாத பாடுபடும் ஒரு சூழ்நிலை அங்கே உருவாகியிருக்கிறது. உண்மை யில், வெதும்புகிறோம்; வேதனைப் படுகிறோம்.

அன்பைத் தெய்வம் என வணங்குபவர்கள் தமிழர்கள்! அதேபோல, அன்பைப் போதித்த, போதிமாத்துப் புத்த னின் கொள்கை வழிநடப்பவர்கள் சிங்களவர்கள்!! இருந்தும், இரு வரிடையிலும் ஏற்பட்ட காழ்ப்பு, கலவரம் ஆகுமளவுக்கு வளர்ந் ததை எண்ணி வெட்கப்படு கிறோம். ஒருவர், இருவரல்ல, இரு பதுபேருக்குமேல் இறந்தன ரெனின், ஐயகோ, மனித சமு கம் நாகரிகம் பெற்றுவிட்ட தென்று சொல்லமுடியும்?

நெருப்புப் பற்றி எரியுமுன், அணைக்க முயற்சிப்பதுதான், விவேகிகள் செயலாகும். அந்த விவேகத்தை வீம்புக்குப் பலியிட்டதால், வந்த தீவினை தான் இது. சித்தங் கலங்கு கிறோம்—இனியாவது, தீராத ஒரு சுமுக நிலையை அமைக்கும் வழிகளைக் காணுமாறு இலங்கை சர்க்காரைக் கோருகிறோம்.

இந்தத் துறையில், டில்லி காட்டிவரும் அசிரத்தை அறியாததல்ல. டில்லிதான் அப் படியென்றால், ஆளும் காமராசர் அரசாவது ஏதாவது செய்தால் தான் நல்லது. சாகிறவர்கள் தமி ழர்கள்! தவிப்பவர்கள் தமிழர் கள்!! அவர்களது செந்நீரையும், கண்ணீரையும் துடைக்க இப் போதாவது ஒரு நிரந்தர பரிகாரம் கண்டு, இந்தக் கொடுமைகள் நிகழாவண்ணம் செய்ய, முன் வரு வார்களா? முன்வருவார்களா? என்று, ஏக்கத்தோடு கேட்கிறோம் ஆள்வோரை. ஐயகோ. இரு பது பேராமே! எண்ணக் கொதிக் குதே நெஞ்சம்!!

★

தென்னாற்காடு மாவட்ட

# தி.மு.க. 3-வது மாநாடு

**1958 ஜூன் 7, 8 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்**

**ஆறுமுகம் பந்தலில், மஜீத் அரங்கில்**

**விருதாசலத்தில் நடைபெறும்.**

| தலைவர் | திறப்பாளர் |
|---|---|
| **மதுரை முத்து** M.C., | **குடந்தை கே. கே. நீலமேகம்** |

## அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

| | | |
|---|---|---|
| என். வி. நடராசன், | காஞ்சி- கல்யாணசுந்தரம், | இரெ. இளம்வழுதி, |
| ஈ. வெ. கி. சம்பத் எம். பி., | ஆர். எஸ். பாண்டியன் | கோவை செழியன் |
| ஆர். தருமலிங்கம் எம்.பி. | இராம. அரங்கண்ணல், | அருண்மொழிவில்வம் |
| மு. கருணாநிதி எம்.எல்.ஏ,, | எஸ். எஸ். தென்னரசு | இ. ஆர். கிருஷ்ணன் |
| சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., | டி.கே. தாமரைச்செல்வன் | க. அறிவழகன் |
| க. அன்பழகன் எம்.எல்.ஏ., | அன்பில் தருமலிங்கம், | எஸ். வி. பதி |
| எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., | டி. வி. நாராயணசாமி, | அலிசேக் மன்சூர் |
| ப.உ. சண்முகம் எம்.எல்.ஏ, | எஸ். ஏ. இராசமாணிக்கம் | வி. பி. இராமன், |
| டி. இருசப்பன் எம்.எல்.ஏ., | கி. மனோகரன் | டி. கே. பொன்னுவேல் |
| பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ. | இரா. செழியன், எம்.ஏ., | அறிவுடைநம்பி |
| S.M. அண்ணாமலை எம்.எல்.ஏ., | எஸ். எஸ். இராசேந்திரன் | பி. ஆர். கோகுலகிருஷ்ணன் |
| எம். பி. சாரதி எம்.எல்.ஏ., | என். எஸ். இளங்கோ | சு. பெருமாள் |
| கவிஞர் கண்ணதாசன், | கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி., | வி. வி. சாமிநாதன் |
| கே. ஆர். இராமசாமி | மா. கி. தசரதன் | அலமேலு அப்பாதுரை, |
| தில்லை வில்லாளன் எம்.ஏ. | ஏ. கே. வில்வம் | பொற்செல்வி இளமுருகு |
| அ. பொன்னம்பலனார், | கே. ஏ. மதியழகன் | பங்கயற்செல்வி |
| | | சற்குணம் |

**மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.**

இசை முரசு **நாகூர் அனீபா** இன்னிசை உண்டு

அண்ணா தலைமையில், செல்வி **மல்லிகா** நடனம் உண்டு

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1

**ஏ. கோவிந்தசாமி** எம்.எல்.ஏ., வ. கு. தலைவர்

**எம். செல்வராஜ்** எம்.எல்.ஏ., பொருளாளர்

**சி. முனுசாமி**, **ஜி. சொக்கலிங்கம்**,
**சி. நடராசன்** எம்.எல்.ஏ., **எம். ஆனந்தன்** எம்.எல்.ஏ., செயலாளர்கள்

**தொ. பிச்சமுத்து**, **பா. குப்புசாமி**, தொ. ப. தலைவர்கள்.